**Previous Examination date – 22.10.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 314 of 2018**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : பாபு** | **Father/Husband's Name: கன்னியப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 27.10.2025**

**Accused Present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திருமதி. ஜெயப்பாண்டி அவர்களுடன் பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் திருமதி. ஜெயப்பாண்டி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திருமதி. ஜெயப்பாண்டி சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் கடந்த 13.11.2016ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது ஆனந்த் என்பவர் எதிரி நாகராஜ் என்ற டீதுாள் நாகராஜ் என்பவருடன் எதிரி வைத்திருந்த கத்தியுடன் எதிரியை ஆஜர் படுத்தி புகார் அளித்தார். புகார் மனுவின் அடிப்படையில் புகாரினை விசாரணை செய்து சாமிநாதபுரம் காவல்நிலைய கு.எண்.223/2016 பிரிவுகள் 387 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமார், சூசைராஜ் ஆகியோர் முன்னிலையில் 13.11.2016ம் தேதி சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை காவல்நிலையத்தில் வைத்து அன்றே 14.30 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிறிய கத்தி 1 படிவம் 91 ல் கைப்பற்றப்பட்டது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிறிய கத்தியை சாட்சிகள் குமார், சூசைராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. **படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **சிறிய கத்தி 1 – அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 387 இ.த.சவின் கீழ் 15.11.2016ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.27 18:21:22 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.